## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 927/2017.928/17,932/17,மற்றும் 933/17** **நாள். 07.03.2023**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள் மனுதாரர் தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசுந்தரி | தொழில் | |
| த. பெ./க.பெ. | கொண்டாரெட்டி | சாதி | |
| கிராமம் | நயம்பாடி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 65 |

**ம..சா.1**

**குறுக்கு விசாரணை**

I. 17.12.2017 ம் தேதி காலை 11.15 மணிக்கு சவுட்டுர் கிராமத்தில் உள்ள துரைராஜ் என்பவரின் நிலத்திற்கு அருகே ரோட்டு ஓரத்தில் நின்று பூ விற்று கொண்டிருந்தேன். நான் நின்று கொண்டிருந்தது ரோட்டின் வளைவு பகுதி என்றால் சரிதான். என்னுடன் ஸ்ரீகவி, அபிதா ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் எனக்கு தெரிந்தவர்கள். அவர்களை நான் அழைத்து வந்தேன். எங்கள் மீது ஆட்டோ வந்து மோதிவிட்டது. ஆட்டோவின் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. ஆட்டோ வி.நயம்பாடியில் இருந்து சவுட்டுர் நோக்கி வந்தது. விபத்தில் எனக்கு இடது கை, இடது காது ஆகியவற்றில் காயம் பட்டது. எனக்கு ஏற்பட்ட காயம் சிராய்ப்பு காயம் என்றால் சரியல்ல. காயம் பட்ட உடன் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன். பின்னர் கலைமணி என்ற மருத்துவரிடம் சிகிச்சை பெற்றேன். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ- 2 விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இதே வழக்கு விபத்து சம்பந்தமா க வேறு வழக்கு இந்நீதிமன்றத்தில் எம்.சி.ஓ.பி எண். 914/2017 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே விபத்து சம்பந்தமாக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எம்.சி.ஓ.பி 914/2017 வழக்கை வாபஸ் பெற்று கொண்ட பிறகு தான் இவ்வழக்கை நடந்த முடியும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்பதால் நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை ரூ. 3 லட்சம் அதிகம் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலம் பாரா 5 ல் சொல்லியுள்ள விவரங்கள் அதிக நஷ்டயீடு பெறுவதற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து

சம்பந்தமாக சக்திவேல் மனைவி அம்பிகா என்பவர் புகார் கொடுத்தார். மேற்படி அம்பிகா விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் நான் காயம் பட்டதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல.

**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 927/2017.928/17,932/17,மற்றும் 933/17** **நாள். 07.03.2023**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள் மனுதாரர் தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்லியம்மாள் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வென்னியன் | சாதி | |
| கிராமம் | வி.நயம்பாடி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 80 |

**ம..சா.2**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-2 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா.2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.13 - 13.17.2017 தேதியிட்ட செஞ்சி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு சான்றிட்ட நகல்.
2. ம.த.சா.ஆ 14 - 17.12.2017 முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ சான்று சான்றிட்ட நகல்.
3. ம.த.சா.ஆ.15 - மனுதாரர் செல்லியம்மாள் என்பவரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)
4. ம.த.சா.ஆ.16 - மனுதாரர் செல்லியம்மாள் என்பவரின் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**குறுக்கு விசாரணை**

செஞ்சியில் இருந்து நானும் என் அக்கா மகன் சக்திவேல் என்பவரும் ஆட்டோவில் சென்றோம். சவுட்டுர் சென்ற போது எதிரே வந்த இரண்டு நபர்கள் மோதாமல் இருப்பதற்காக ஆட்டோ ஓட்டுநர் , ஆட்டோவை திருப்பிய போது கவிழுந்து விட்டது. எதிரே வந்த இரண்டு நபர்கள் மீது மோதாமல்இருப்பதற்காக ஆட்டோ ஓட்டுநர் பிரேக் போட்ட போது விபத்து நடந்தது என்றால் சரிதான். எனக்கு தற்போது வயது 80 ஆகிறது. விபத்தில் எனக்கு மார்பு, தோள்பட்டை ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் செல்வி என்று எழுதப்பட்டுள்ளது. எனது பெயர் செல்லியம்மாள் ஆகும். எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்பதால் நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை ரூ. 6 லட்சம் அதிகம் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பாரா 5 ல் சொல்லியுள்ள விவரங்கள் அதிக நஷ்டயீடு பெறுவதற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 927/2017.928/17,932/17,மற்றும் 933/17** **நாள். 07.03.2023**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள் மனுதாரர் தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொற்கொடி | தொழில் | |
| கிராமம் | ராமலிங்கம் | மதம் | இந்து |
| வட்டம் | ஆர்.நயம்பாடி | வயது | 40 |

**ம..சா.3**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-3 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 3** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.17 - 17.12.2017 தேதியிட்ட செஞ்சி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு சான்றிட்ட நகல்.
2. ம.த.சா.ஆ 18 - மனுதாரர் ஸ்ரீகவி என்பவரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**குறுக்கு விசாரணை**

விபத்தில் அடிப்பட்ட என் மகள் பெயர் ஸ்ரீகவி ஆகும். அவர் தற்போது 12 ம் வகுப்பு படித்து வருகிறார். விபத்து நடந்த இடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். 17.12.2017 ம் தேதி காலை 11 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சவுட்டுர் ரோட்டு வளைவில் நடந்தது. என் மகளும், மற்றொருவரும் திடீரென்று ரோட்டில் ஓடியதால் ஆட்டோ ஓட்டுநர் திடீரென்று பிரேக்

பிடித்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. செஞ்சி அரசு மருத்துவமனையில் முதலில் என் மகளுக்கு சிகிச்சை பெற்றோம். பின்னர் கலைமணி மருத்துவரிடம் சிகிச்சை பெற்றோம். நான் தாக்கல் செய்துள்ள விபத்து பதிவேட்டில் என் மகளுக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் பாரா 4, 5 ல் சொல்லியுள்ள விவரங்கள் அதிக நஷ்டயீடு பெறுவதற்காக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகம் என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கவன குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டயிடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. என் மகளுக்குவிபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக வேறு வழக்கறிஞர் வைத்து எம்.சி.ஓ.பி 911/2017 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை வாபஸ் பெற்ற பிறகு தான் இவ்வழக்கில் நான் நஷ்டயீடு கோரமுடியும் என்றால் சரியல்ல.

**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 927/2017.928/17,932/17,மற்றும் 933/17 நாள். 07.03.2023**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள் மனுதாரர் தரப்பு 4 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | தொழில் | |
| த. பெ./க.பெ. | செல்வராஜ் | சாதி | |
| கிராமம் | வி.சாத்தனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 44 |

**ம..சா.4**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-4 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 4** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.19 - 17.12.2017 தேதியிட்ட செஞ்சி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு சான்றிட்ட நகல்.
2. ம.த.சா.ஆ 20 - மனுதாரர் சக்திவேல் என்பவரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது )
3. ம.த.சா.ஆ.21 - மனுதாரர் சக்திவேல் என்பவரின் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**குறுக்கு விசாரணை**

ஆட்டோவில் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நஷ்டயீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆட்டோவின் பதிவு எண் தெரியாது. ஆட்டோவில் நயம்பாடியில் இருந்து செஞ்சிக்கு சென்றேன். சவுட்டுர் கிராமத்தில் உள்ள ரோட்டின் வளைவில் ஏற்பட்டது. ரோட்டின் குறுக்கே திடீரென்று 2 நபர்கள் வந்ததால்ஆட்டோ ஓட்டுநர் பிரேக் பிடித்தபோது ஆட்டோ கவிழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். திடீரென்று ரோட்டின் குறுக்கே சென்றவர்களுக்கும் விபத்தில் காயம் ஏற்பட்டது. ரோட்டின் வளைவில் ஆட்டோ சென்ற போது கட்டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு இடது கால் மூட்டி பின்னால் எலும்பு முறிவு ஏற்பட்டது. காயம் பட்ட உடன் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கியிருந்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 1 வாரம் சிகிச்சை பெற்றேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றாலும், அதனால் தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பாரா 5 ல் சொல்லியுள்ள விவரங்கள் நான் நஷ்டயீடு அதிகம் பெறுவதற்காக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டயிடு தொகை ரூ. 3 லட்சம் அதிகம் என்றால் சரியல்ல. என்னுடைய விபத்து பதிவேட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதனால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றாலும், நான் மாதம் ரூ. 20 ஆயிரம் சம்பாதித்தாக சொல்லியுள்ளது உண்மையல்ல என்றாலும் சரியல்ல.